
IN13175-001 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org



IN13175-002 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

IN13175

IN13175-003 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

403

உ ஓம் சிவ சக்திவேல் முருகன் துணை



விநாயகர் சுப்ரமணியர் சோமாஸகந்தர் உமையவள் சண்டிகேஸ்வரர்

# ஸ்கந்தோற்சவ விளக்கம்

சென்னை காளிகாம்பாள் கமடேஸ்வரர் ஆலய
பிர்ம்மஸ்ரீ சிவஸ்ரீ சிவாச்சாரியார் குலபூஷணம்
சிவத்திரு தி. ஷ. சாம்பமூர்த்தி சிவாச்சாரியார்
சுவாமிகளுக்கு உரிமையாக்கி வெளியிடுபவர்:

திரு. மு. கி. முத்துராமலிங்கம் பிள்ளை
**BOJANA KORADA FACTORY**
83-A, Convent Road, Taiping. P.O. Box 79 Malaysia. TEL:822579

IN13175-004 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

உ சிவாய நம

# மஹா மிருத்யுஞ் ஜய மந்திரம்

ஓம் த்ரயம்பகம் யஜா மஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருகமிவ பந்தனுத்
ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்

நறுமணமிகுந்தவரும் எல்லா ஜீவன்களுக்கும் புஷ்டி அளிப்பவரும் முக்கண்ணனுமான சிவபெருமானைப் பூஜிக்கின்றோம்; வெள்ளரி தன்கொடியினின்றும் விடுவிக்கப்படுவதுபோல் அமரத்துவத்தின் பொருட்டுஅவர் நம்மை மரணத்தினின்றும் விடுவிப்பாராக.

(நன்மைகள்) இந்த மகா மிருத்யுஞ்ஜய மந்திரம் ஓர் உயிர் வழங்கும் மந்திரம். இந்நாட்களில் நம் உயிர்க்குப் பல வகைகளில் எதிர்பாராத நிலையில் இன்னல்கள் ஏற்படுகின்றன. இம்மந்திரம் பாம்புக்கடி, மின்னல், மோட்டார் விபத்துகள் தீ விபத்து, ஸைகிள் விபத்து வெள்ளம், விமான விபத்து, முதலிய எல்லா விபத்துக்களாலும் மரணம் ஏற்படுவதைத் தடுக்கிறது. மேலும் இதற்கு நோய் நிவர்த்திக்கும் சக்தியுண்டு, உண்மையோடும் நம்பிக்கையோடும் உச்சரித்தால் மருத்துவ வல்லுனர்களால் தீராது என்று கைவிடப்பட்ட பிணிகளும் போக்கப் படுகின்றன. இம் மந்திரம் வியாதிகளை நீக்கும் ஆயுதம்; மரணத்தை வெல்லும் மந்திரம்.

— இமயஜோதி சுவாமி சிவானந்த மகராஜ்

உ ஓம் சக்தி
ஓம் சீதளா தளா
ஸ்ரீ காளிகாம்பாள் துணை

INSTITUT FRANCAIS D'INDOLOGIE PONDICHERY
TANT 403



ஸ்ரீ காளிகாம்பாள்

தைப்பிங் திரு. [illegible] முத்து ராமலிங்கம் பிள்ளை அவர்களால் அச்சியற்றிய இந்நூலை சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேசுவரர் கோவில் சிவாச்சாரியார் குலபூஷணம் சிவஸ்ரீ. பிரம்மஸ்ரீ தவத்திரு. தி. ஷ. சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் சுவாமிகளுக்கு அன்பு காணிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டது. இந்நூலில் கிடைக்கும் பொருள் அனைத்தையும் தேவி ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர் ஆலய திருப்பணிக்கு அர்ப்பணிக்கத்திருவுள்ளம் கொண்டுள்ளார்கள்.


மூன்றும் பதிப்பு: — 31-1-1980

IN13175-005 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

உ
ஓம் கணபதி

உ ஓம் சக்தி

உ
ஓம் பராசக்தி





உ ஓம் ஸ்ரீ கணேசாய நம

## விநாயகர் ஸ்துதி

ஓம் பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண அற்புதமலர் தலைக் கணிவோமே.

## சிவபெருமான் ஸ்துதி

விண்ணாளும் தேவர்க்கும் மேலான வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந் துறையில்
கண்ணார் கழல் காட்டிநாயேனை ஆட்கொண்ட
அண்ணாமலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

## பார்வதி ஸ்துதி

சக்தியாய் விந்துவாய் மனோண் மணியாய்த்
தயங்கிய மகேசையாய் உமையாய்
நித்தில வடந்தாளுகில் மூலத்திருவாய்
நெடும் புகழ் வாணியாய் வேறாய் மலவிருள்கெடுத்து
எத்திர மிறைவநின்ற வனவனுக்கியங்கு பூரணியை ஏத்தெடுப்பாம்.

## சிவசுப்ரமணியர் ஸ்துதி


ஆம்போதும் வேலும் மயிலும் என்பேன்
உயிர் அந்தரத்தே போம்போதும் வேலும் மயிலும் என்பேன்
இந்தப் பொய்ச் சடலம் சாம்போதும் வேலும் மயிலும் என்பேன்
தணலூடு பற்றி வேம்போதும் வேலும் மயிலும் என்பேன் செந்தில் வேலவனே.

உ ஓம்

ஸ்ரீ கணேசாய நம

# ஸ்கந்தோற்சவ விளக்கம்

## சமர்ப்பணம்



சிவாச்சாரியகுலபூஷணம்
பிரம்ம ஸ்ரீ தவத்திரு
கே. ஏ. சபாரெத்ன
சிவாச்சாரியார்
சுவாமிகள்



சிவாச்சாரியகுலபூஷணம்
சிவஸ்ரீ பிரம்ம ஸ்ரீ தவத்திரு
தி. ஷ. சாம்பமூர்த்தி
சிவாச்சாரியார்
சுவாமிகள்

என்னையும் பொருளாக, இன்னருள் புரிந்தாளும்
பொன்னடித் தாமரை போற்றி என்பதற்கிணங்க

சென்னை காளிகாம்பாள் கமடேஸ்வரர் ஆலய ஆத்யட்சகர் பிரம்ம ஸ்ரீ சிவாச்சாரிய குலபூஷணம், தவத்திரு. தி. ஷ. சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் சுவாமிகள் ஸ்கந்தோற்சவ விளக்கமெனும் இந்நூல் புத்தக ரூபமாக அச்சிட்டுத் தரும்படி என்னிடம் தந்தார்கள். நான் வணங்கி வாங்கிக் கொண்டேன்.

இந்நூலுக்கு சித்தாந்த வித்தகர் என்று புகழ்வாய்ந்த சைவப்பெரியார் உயர்திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் எல்லோரும் படித்துப் பயன் பெறத் தக்கதாக அற்புதமான மதிப்புரை எழுதித்தந்துதவி இருக்கிறார்கள். இதுபோற்றுதற்குறியது அவர்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கம் உரியதாகுக. இந்நூலுக்கு சிறப்புரை எழுதி வழங்கிய சங்கிசை மேதை திருவாரூர் தி. சு. மகாலிங்க குருக்கள் அவர்களுக்கும் எனது அன்பு கலந்த வணக்கம் உரியதாகுக. இதை பக்குவமாக அச்சியற்றித் தந்த தைப்பிங் சண்முகா அச்சகத்தினருக்கும் எனது நன்றி கலந்த வணக்கம் உரியதாகுக.

இந்நூலின் மூலகர்த்தாவாகிய தங்கசாலை அருள்மிகு ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி தேவஸ்தானம் அர்ச்சகர் பிரம்மஸ்ரீ கே. எஸ். சபாரெத்ன சிவாச்சாரிய சுவாமிகள் முதற்பதிப்புக்கு எழுதித்தந்த ஸ்ரீ கந்தோற்சவ விளக்கத்துடன் கந்தர் சஷ்டி அனுஷ்டிக்கும் முறையும் பூணூலின் பெருமையையும் இம்மூன்றும் பதிப்புக்கு விளக்கி எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்கு எனது நமஸ்காரம் உரியதாகுக.

இந்நூலை மூன்றும் பதிப்பாக அச்சியற்றி சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர் அத்யட்சகர் சிவஸ்ரீ பிரம்மஸ்ரீ சிவாச்சாரியார் குலபூஷணம் உயர் திரு. தி. ஷ. சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் சுவாமி அவர்களுக்கு உரிமையாக்கி எனது அன்பு காணிக்கையாக சமர்ப்பிக்கிறேன்.

திரு. மு. கி. முத்துராமலிங்கம் பிள்ளை, தைப்பிங்
**M. K. Muthuramalingam Pillai,**
Bojana Korada Factory 10-12, 283 A Convent Road,
P.O.Box. 79, Taiping. Malaysia Phone: 822579

R.E. 44823

உ ஓம்
அண்ணாமலையார் துணை

# ஸ்கந்தோற்சவ விளக்கமும் - பவித்ரோற்சவ விதியும்

மூன்றாம் பதிப்பு:

பதிப்பாசிரியர்:
சிவாகம ரத்னம் ஆகம ஆசிரியர்
கே. ஏ. சபாரத்ன சிவாச்சாரியார் சுவாமிகள்
ஸ்ரீ சிவ சுப்பிரமண்ய சுவாமி தேவஸ்தானம், சென்னை.

## பதிப்புரை

ஆத்திகம் அழியாது. என்றும் நிலையாக தழைத்து நிற்க வேதாகம நூல்களே முக்கிய காரணமாக அமைந்திருக்கின்றன. அப்பெருநூற்படி பிற சமயப் பற்றுகொண்ட தமிழர்கள் எந்த தேசம் சென்று பிற சமயத்தினருடன் இணைந்து பழகிய போதிலும் தமிழ் பண்பின் மணங்கமழும் கோயிற் வழிபாட்டிற் பெரும் பங்கு கொள்கின்றனர். அவர்களின் சமய வளர்ச்சிக்கு ஏதுவான திருவிழாக்கள் செய்யும் முறையைப்பற்றி வட மொழியிலும் தென் மொழியிலும் பற்பல நூல்கள் உள்ளன.

அவைகளில் ஒன்றாகிய கௌமார தந்திரமென்ற சைவ உபாகம நூலிற் கூறிய ஸ்கந்தோற்சவ படலத்தின் சாரமாய் அமைந்ததே "ஸ்கந்தோற்சவ விளக்கம்" என்ற இச்சிறிய நூலாகும். இச்சிறிய நூலில் மகோற்சவமென்னும் திருவிழா இம்மையில் போக மோக்ஷங்களுக்கு காரணமாய் அமைந்த ஆன்மார்த்த பூஜை, பரார்த்த பூஜை சைவ சமய தீக்ஷையாகவும் அத்வசுக்தியுக்தமான நிர்வாண தீக்ஷையே மகோற்சவமெனவும் தீர்த்தோற்சவமே ஆசார்யாபிஷேகமெனவும் ஆக உற்சவமென்பது உலகின் கண்ணுள்ள உயிர்களுக்கு செய்யப்படும் சாம்பவீ தீக்ஷையாகும்.

மஹோற்சவத்தினால் சாம்பவீ தீக்ஷை பெற்று உயிர்கள் யாவும் நித்யபூசை செய்து பயன் பெற வேண்டி ஆலயங்கள் அமைக்கப்பெற்று ஆங்காங்கு நடைபெறும் வேதாகம முறையான பரார்த்த நித்திய பூஜையே இம்மையில் போகத்தையும் மறுமையில் மோக்ஷத்தையும் கொடுப்பதாகும். ஆலயங்கள் தோறும் நடைபெறும் நித்ய பூசை தவரின் பற்பல குற்றங்கள் ஏற்படும் அதைத்தடுத்து பூர்த்தி செய்விக்க ஆண்டுக்கு ஒருமுறை செய்விக்கும் உற்சவமே பவித்ரோற்சவம் என்பதாகும்.

மேற்கூறிய பவித்ரோற்சவம் நித்யாங்கமாய் சொல்லப்பட்டிருப்பதால் பவித்ரோற்சவ விளக்கமும் இப்பதிப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

முருகனடியார்களுக்கு விதிமுறை வழுவாவண்ணம் முருகன் பெருவிழாக்களைச் செய்து சாம்பவீதீக்ஷையான மகோற்சவப்பயன் யாவும் பெற்றுய்யவும் கோயில்களில் நித்ய பூசாங்கமாய் ஆண்டுதோறும் பவித்ரோற்சவமும் செய்வித்து ஆதி தைவீகம், ஆதி பௌதிகம், ஆத்யான்மீக மென்ற மூவகை துக்க நிவர்த்தியைப் பெற்று பவித்திரர்களாக (பரிசுத்தர்களாக) முருகப்பெருமான் அருள் புரிவாராக.

எனது சிவஞானதீக்ஷா குருவாகிய பரமாச்சார்யாளர் இருந்த திருவதிகை சிவஸ்ரீ மீனாக்ஷி சுந்தர தேசிகப்பெருமான் திருவடிக்கி சமர்ப்பணமாக எழுதிய இந்நூலினை அச்சிற் பதிப்பித்து வெளியிட காரணகர்த்தாவான சிவஸ்ரீ சாம்பமூர்த்தி சிவத்திற்கும் அவர் அன்புக் கிசைந்து புத்தக வடிவில் அச்சிட்டு உதவிய தைப்பிங் போஜனக் கொறடா பாக்டரி திரு. மு. கி. முத்துராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கும் இந்நூல் பயன் தரக்கூடியது என்ற முறையில் மகிழ்ச்சி கொண்டு மதிப்புரை எழுதிய சித்தாந்த வித்தகர் உயர்திரு. முரு. பழ இரத்தினம் செட்டியார் அவர்களுக்கும் எல்லாம் வல்ல சிவபெருமான் திருவருள் புரிய எனது சிவ சுப்ரமண்ய கடவுளை இறைஞ்சுகின்றேன்.

இப்படிக்கு,
சிவாகம இரத்தினம் கே. ஏ. சபாரத்ன சிவாச்சாரியார்

IN13175-008 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

R.E. 44823

உ. ஓம் நமசிவாய

# சைவ சித்தாந்த வித்தகர்

# உயர்திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்களின்

# மதிப்புரை

"ஸ்கந்தோற்சவ விளக்கம் என்னும் இந்நூல் சென்னை சிவ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தைச் சார்ந்த கே. எஸ். சபாரெத்ன சிவாச்சாரியார் அவர்களால் எழுதப் பெற்றதாகும்.

இவ்வாண்டு சென்னையில் இருந்து இங்கு வந்து தைப்பிங், ஈப்போ முதலிய நகரங்களில் உள்ள மகா மாரியம்மன் கோவில்களுக்குத் திருக்குட நன்னீராட்டு விழாவினைச் சிறப்புற நடத்தி வைத்த சிவாச்சாரியார் குல பூஷணம் சிவத்திரு. தி. ஷ. சாம்ப மூர்த்தி சிவாச்சாரியார் அவர்கள் இந்நூல் ஆசிரியரின் தலை மாணாக்கர் ஆவார். தன் வேண்டுகோளுக்கிணங்கி ஆசிரியப் பெருமான் எழுதித் தந்த இந்நூலை இப்பொழுது அவர் மலேஷியாவில் உள்ள மெய் அன்பர் தைப்பிங் போஜன கொறடா பாக்டரி திரு. மு. கி. முத்துராமலிங்கம் பிள்ளை அவர்களைக் கொண்டு வெளியிடுகின்றார்கள். அவர் முயற்சி பெரிதும் போற்றத்தக்கதாகும்.

முருகப் பெருமானுக்கு திருவிழாக்கள் பல உண்டு. பெரிய திருவிழா மகோற்சவம் எனப்படும். சிறிய திருவிழா மாத உற்சவம் எனப்படும். ஆண்டுகளுக்கு ஒருமறை செய்வது பெரிய திருவிழா ஆகும். மாதம் தோறும் செய்வது சிறிய திருவிழா ஆகும். இத்திருவிழாவினை எப்படி நடத்துவது? அதில் செய்ய வேண்டிய கிரியைகள் யாவை? அவற்றின் தத்துவம் என்ன? என்பன போன்ற விவரங்களை நாம் அறிந்து கொள்ள இந்நூல் துணை செய்கின்றது.

ஆச்சாரியார் அவர்கள் கிரியைகளுக்குள்ள தத்துவங்களைச் சைவ சித்தாந்த அடிப்படையில் விவரித்திருக்கிறார். திருக் கோயில்கள் சிவாகம விதிப்படி அமைந்தனவாதலால், சைவ சித்தாந்த அடிப்படையில் தத்துவார்த்தம் செய்வதே சரியானதாகும். ஸ்மார்த்த முறையில் விளக்கம் செய்வது பொருந்தாது. சித்தாந்த சாஸ்திர அறிவுக்கண் கொண்டு தத்துவ விளக்கம் சொல்கின்ற இந்நூலை சைவ சமய அன்பர்கள் யாவரும் வாங்கி அவசியம் படித்தறிய வேண்டும்.

சைவ சமயத்தில் தீட்சை பெற வேண்டியது மிக முக்கியம். ஆனால் எல்லாச் சாதியாரும் தீட்சை பெற முடியாது. ஆண்டவன் யாவருக்கும் பொதுவானவன். எனவே எல்லா சாதியாருக்கும் அவன் பாரபட்சம் இன்றி அருள் பாலிக்கக் கடமைப் பட்டுள்ளான். அப்படியாயின் தீட்சைப் பேறு ஒரு சில ஜாதியாருக்கே உண்டென்றால் ஏனையோர் என்ன செய்வது? அவர்கள் உய்வதற்கு வழி என்ன? இவ்வினாவிற்குறிய விடையை இந்நூல் மிகத் தெளிவாகத்தருகிறது.

மகோற்சவம் என்னும் திருவிழாத்தான் சாம்பவ தீட்சை ஆகும். திருவிழாக் காலத்தில் இறைவனின் மூர்த்தம் வீதிகளில் திருஉலா வருவதால், எல்லாச் சாதியாரும் இறைவனின் அருள் நோக்கால் சாம்பவ தீட்சை பெறுகின்றனர் இறைவனே தீட்சை செய்விப்பதால் இத்தீட்சை மிகச் சிறப்பான ஒன்றாக அமைகிறது. திருவிழா என்பதே ஜாதி, மத, இன பேதம் இன்றி எல்லோருக்கும் செய்யப்படும் தீட்சை என இவ்வாசிரியர் சொல்வது குறிப்பிடத்தக்கதாகும்.

IN13175-009 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

திருவிழாவில் கடைசி நாள் உற்சவம் தீர்த்தவாரியாகும். தீர்த்தவாரி விழா எல்லாச் சாதியாரையும் சிவானந்தத்தில் மூழ்குவித்து, சிவ போகத்தைத் தரும், என ஆசிரியர் அவர்கள் சொல்வது சைவ சமய கோட்பாட்டின்படி மிகப் பொருத்தமான கருத்தாகும்.

சித்தாந்த சாஸ்திரங்களை ஆழமாகப் பயின்ருல்தான் தத்துவக் கருத்துக்களை இது போன்று தெளிவாகச் சொல்ல முடியும். ஆசிரியர் அவர்களின் சித்தாந்த நூல்ப்பயிற்சி மிகவும் போற்றுதற்குறியது.

சித்தாந்த சாஸ்திர அடிப்படையில் விளக்கம் சொல்லுகின்ற நூல்கள் பல வெளிவருதல் வேண்டும். ஆசிரியர் அவர்கள் இதுபோன்ற பல நூல்களை எழுதி சைவப் பெருமக்களுக்கு உதவ வேண்டும். அவர் நீடுழி வாழ்ந்து, இத்தகைய அறிய நூல்களை வெளியிட வேண்டும் என முருகப் பெருமான் திருவருளை இறைஞ்சுகிறேன்.

14-9-1979 இங்ஙனம்,

ஈப்போ. முரு. பழ. இரத்தினம்

உ சிவாய நம

# சிறப்புரை

வேதம் விதித்ததே விதி. ஆகமம் கூறுவதே கிரியை. நமது சனதன தர்மத்தில் கிரியை மயமாக சர்வேஸ்வரன் இருப்பதாக, நம் புராதன நூல்கள் கூறுகிறது. அதற்கு ஒப்ப மூன்று பிரமாணம்களில்தான் உலகத்தின் இயக்கங்கள் இருக்கிறது. அதாவது ஆகமப்பிரமாணம், பிரத்யக்ஷபிரமாணம்; அனுமானப்பிரமாணம் இந்த மூன்று பிர்மாணங்களை நம்பாமல், ஒருஜீவனுலும் உடலில் தரித்து வாழமுடியாது. நம்முடைய மூதாதயர்கள் நமக்கு, விட்டு சென்றிருக்கும் கருவூலங்கள் நமது, ஆகமங்கள். வேதம் மொழிந்தவாயால் ஆகமகிரியைகளை கூறி அதை விதிப்படி நடத்த ஆனதி சைவமான ஈசன் ஆதிசைவத்தைதந்தான். அதற்கொப்ப இந்தநூல் சிவோஹம் பாவனையில் இருக்கும் ஆச்சார்யபுருஷர்களான ஸ்ரீலஸ்ரீ சபாரத்தின சிவாச்சாரியார் பூரண ஆசியுடன் சிவஸ்ரீ தி. ஷ. சாம்பமூர்த்தி சிவாச்சாரியாருக்கு உரிமையாக்கிதந்த இந்நூலை- வெளியிட்டுத்தந்த போஜனக்கொறடா பாக்டரி திரு. மு. கி. முத்து ராமலிங்கம் பிள்ளை அவர்கள் தன்னுடைய வாழ்நாளில் மேற்கொண்ட தொண்டுகளில் சமயம், அரசியல் இரண்டையும் இரண்டு கண்கள் போல் காத்து வந்திருக்கிருர். மக்கள் தொண்டே மஹேசன் தொண்டு என்ற முறையில் நாட்டின் விடுதலை இயக்கத்தில், தோளோடு தோள் நின்று வீர முழக்கம் செய்தவர்.

IN13175-010 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

இன்றும் சமயத்திற்காக, அவர் தொண்டு, மங்கள சங்கின் முழக்காக இருக்கிறது. அவர் இதுபோல் சமய நூல்களை அநேகம், ஆக்க, ஊக்கு வித்த பெருந்தகை வாழ்க. அவர் தொண்டு சிவாச்சாரியார் (சாம்பமூர்த்தி) அவர்கள் தனக்கு கிடைத்த நன்மைகளை தேவிஸ்ரீ காளி அம்மனுக்கு அர்ப்பணிக்கும் உளப்பாங்கினை பெற்றவர். அதற்கு ஒப்ப இந்த நூலில் கிடைக்கும், பொருள் அத்தனையும் சென்னை தேவி ஸ்ரீகாளிகாம்பாள் கமடேஸ்வரர் ஆலய திருப் பணிக்காக அர்ப்பணிக்கிறார்கள் என்றால் அது ஆச்சர்யப்பட கூடியது அல்ல. அவர் தன் லக்ஷயத்தில் நிலைத்து நிற்கிறார் என்றுதான் அர்த்தம். இந்த நூலில் கிடைக்கப்பெறும் நல்ல கருத்துக்கள் எல்லோருக்கும் மிக உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஏன் என்றால் நமது சமய சடங்குகளின் கருத்துக்களும், தத்துவம் அறியாத நமது வாரிசுகள் பிறரிடம் நமது சமய அடிப்படை கருத்துக் களை சொல்ல முடியாமல் கஷ்டப்படும் இந்த சந்தர்ப்பத்தில் இதுபோன்ற நூல்கள் மிகவும் பயன் உடையது. மேலும் இதுபோல் நமது சிறு சிறு சடங்கு களை விளக்கிக்கூறும் சிறு நூல்கள் அவசியம் வெளிவர வேண்டும். அதைப் படித்து நமது வாரிசுகள் நல்ல பயன் அடையவேண்டும் என்பது என் விருப்பம் அது, சந்தர்பபங்களில், அன்பர்கள், உதவியால் வெளிவந்து நல்ல பயன் தரும் என்று பூரணமாக நம்புகிறேன்.

அன்பன்,
தி. சு. மகாலிங்கக் குருக்கள்
திருவாரூர்.

ஸ்ரீ சக்தி துணை



# ஸ்கந்தோற்சவ விளக்கம்

1 "தூய விமானமும் தூலமதாகுமால்
2 ஆய சதாசிவமாகு நற்சூக்குமம்
3 பாய பலிபீடம் பத்திரலிங்கமாம்
4 ஆய அரநிலை ஆயந்து கொள்வார்கட்கே"

எனத்திருமூலர் திருமந்திரத்தில் சொல்லியபடி தூலலிங்கமாகிய கருவரை விமானத்தையும் சூக்குமலிங்கமாகிய கருவறையில் அமர்ந் திருக்கும் இறைவனையும், பத்ரலிங்கமாகிய பலிபீடம் முதலியவற் றையும் கொண்டிருக்கும் திருக்கோயில்கள் யாவும் உலக நலத்தை

IN13175-011 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

முன்னிட்டுப் பரார்த்த பூஜையாகிய ஆகம நெறிபூஜைக்குட்பட்டன வாகும்'' அவ்வாகமங்களில் ஒன்ருகிய லலிதாகமத்தின் உபாபகம மான "குமார தந்திரம்'' என்னும் நூல் கௌசிகர் என்ற முனிபுங்க வருக்குத் தேவாதி தேவஞன சிவபெருமாஞல் உபதேசிக்கப்பட்டது.

இவ்வாகமத்தின்படி முருகப்பெருமாஞுக்குச் செய்யப் பெறும் உற்சவத்தின் விளக்கமே "ஸ்கந்தோற்சவ விளக்கம்'' என பெயர் பெற்றது. உற்சவம் என்பது உத்தம யாகமெனவும் சிருஷ்டிஸ்தித்யந்தஸம் ஞ்யகம் என்னும் முத்தொழில் குறிப்பு எனவும் பிறவிப்பயஞகிய போகமோட்சத்தை கொடுப்பது எனவும் கொள்ளப்படும். இந்த உற்சவம் குமாரதந்திரத்தில் மாசோற்சவம், மஹோற்சவம், பக்தோற்சவம் என மூன்ருக வகுக் கப்பட்டிருக்கிறது.

"மாசோற்சவஸ்து ப்ரதம
த்வீதீயஸ்து மஹோற்சவ
பக்தோற்சவ ஸ்த்ரிதீயஸ்து வக்ஷ்யதே முனிபுங்கவ
(குமாரதந்திரம் ஸ்கந்தோற்சவ விதிப்படலம்)

மாசோற்சவம் என்பது அமாவாசையன்றும் மாதப்பிறப்பன்றும் முருகனே வீதியிலோ அல்லது ஆலயத்தின் பிரகாரத்திலோ பத்தி உலாச் செய்விப்பது ஆகும். மஹோற்சவ மென்பது முறையே 1,3,5,7,9,12 ஆகிய தினங்களில் ஆகம விதிப்படி செய்விக்கும் திருவிழாவாகும். ஆடி மாதப் பிறப்பு தைமாதப்பிறப்பு ஆகியவை களுக்குத் தக்ஷிணாயனம் உத்ராயனம் என்றும் சித்திரை வருஷப் பிறப்புக்கும் ஐப்பசி மாதப் பிறப்புக்கும் விஷ்ணுபதி புண்ணியகால மென்றும் சூரிய சந்திர கிரஹணங்களுக்கு உபராக புண்யகால மென்றும் கூறப்பெறும். அர்த்தோதயம், மஹோதயம் சிவராத்திரி முதலியனவும் புண்யகாலங்களாகும். இப்புண்ய காலங்களில் பக்தர்களால் பக்தி சிரத்தையுடன் செய்விக்கும் தீர்த்தோத்வஸ்த் திற்குப் பக்தோற்சவமெனப் பெயர். இப்பக்தோற்சவத்தில் பலிதானம் என்ற கிரியை கிடையாது.

இனி மகோற்சவ மென்பது ஆறு விதமாய் பிரிக்கப்படு கிறது. அவைகளாவன பைத்ருகம், சௌக்யம், ஸ்ரீகரம், பௌதி கம், சாத்விகம், சிவம், என்பனவாகும். பைத்ருகம் என்பது "பைத் ருகம்துவாதசாஹம்ஸ்யாத்'' 12 நாள் திருவிழாவாகும் "நவாஹம்

சௌக்ய முச்சதே" 9 நாள் திருவிழாவிற்கு சௌக்கியம் என்று பெயர். 7 நாள் திருவிழாவிற்கு ஸ்ரீ கரம் என்றும் 3 நாள் திருவிழா விற்கு சாத்விகம் என்றும் ஏகதின உற்சவத்திற்கு சிவம் என்றும் பெயராகும்.

சிவம், சாத்விகம், பௌதிகம் என்ற 1 நாள், 3 நாள், 5 நாள் விழாக்களில் "கொடிஏற்றம்" என்ற துவாஜாரோஹணம் செய்ய லாகாது. ஸ்ரீகரம், சௌக்கியம் பைத்ருகம் என்ற 7, 9, 12, நாட்கள் கொண்ட மஹோற்சவங்களிலேதான் துவாஜாரோஹணம் முதலிய 16 கிரியைகள் செய்யவேண்டும். மேற்படி உற்சவங்களில் தீர்த்த வாரி தினமே முக்கியமாகும். தீர்த்த தினத்துக்குமுன் 11,8,6 தினங் களிலும் இருவேளைகளிலும் யாகசாலையில் மண்டலேசுவரர் கும்பேஸ்வரர், யாகேஸ்வரர் பூஜையும் ஓமகுண்டத்தில் (குஹாக்னி) ஹோமமும், அஸ்திர யாகம், அந்தர்பலி, பஹிர்பலி, என்று பலி தானமும் முக்கியமாகக் கவனித்து செய்தல் வேண்டும்.

உற்சவ தினத்தின் கடைசி தினம் காலையில் செய்யும் தீர்த் தவாரியே தீர்த்தோத்ஸவமாகும் இதுவே முக்கிய தினமாகும். முரு

கப்பெருமானுக்கு எந்தமாதத்திலும் கிருத்திகா நட்சத்திரம் விசாக நட்சத்திரம் ஆகியவற்றை தீர்த்த நட்சத்திரமாக வைத்தும் தேய் பிறை ஷஷ்டி, வளர்பிறை ஷஷ்டி திதியை தீர்த்த தினமாகவும் கொண்டு அதற்கு முன்பாக 6,8,11 தினங்களில் மஹோற்சவம் செய்வது ஒரு முறையாகும். சித்திரைமாதம் முதல் பங்குனிமாதம் வரையிலும் எந்த மாதத்திலும் அந்தந்த மாத நட்சத்திரங்களைத் தீர்த்த நட்சத்திரமாக வைத்து மஹோற்சவம் செய்வது முறை யாகும். அவைகளில் சித்திரை நட்சத்திரம் சித்திரை மாத நட்சத் திரமாகும். இதுபோல் வைகாசி மாதம் விசாகம், ஆனியில் மூலம் ஆடியில் உத்ராடம், ஆவணியில் திருவோணம், புரட்டாசியில் பூரட்டாதி, ஐப்பசியில் அஸ்வணி, கார்த்திகையில் கிருத்திகை, மார்கழியில் திருவாதிரை, தையில் பூசம், மாசியில் மகம், பங்குனி யில் உத்திரம் ஆகியவைகளைத் தீர்த்த நட்சத்திரமாக வைத்து அதற்குமுன் பைத்ருகம் முதலிய உற்சவதினக் கணக்குப்படி கொடியேற்றம், முதல்யாவும் செய்து தீர்த்த நட்சத்திரத்தில் காலை யில் தீர்த்தோற்சவம் செய்வது மஹோற்சவம் ஆகும். சமுத்திரக் கரையிலுள்ள (சமுத்திரத்தையே தீர்த்தமாகக் கொண்ட) ஆலயங்

IN13175-013 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

களுக்கு அந்தந்த மாத பூரணிமையிலேயே தீர்த்தோற்சவம் செய்ய வேண்டும். அவ்விடங்களில் நட்சத்திரத்தில் செய்வது தவருகும்.

மேலும் ஒரு மாதத்தில் 2 நட்சத்திரமோ அல்லது 2 திதியோ வருமாகில் பிந்திய நட்சத்திரம் அல்லது திதியிலேயே விழாச் செய்தல் வேண்டும். முன்திதியில் செய்வது கர்த்தாவுக்கு ஆகாது.

"க்ருதஞ்சேத் பூர்வ நட்சேத்ரே ய: கர்தாஸ விநச்யதி"
(குமாரதந்திரம் ஸ்கந்தோற்சவ விதிபடலம்)

தீர்த்த நட்சத்திரம் துண்டிக்கப்பட்டு முன்தினம் பாதியும் மறு நாள் பாதியுமாய் வரும்பொழுது மறுநாளே செய்யவேண்டும். மறுநாள் காலே 10 நாழிகைக்கும் குறைவாக தீர்த்த நட்சத்திரமோ பர்வமோ இருக்குமாயின் முன்தினமே தீர்த்த தினமாகும். பிரம மோற்சவம் என்ற மகோற்சவம் முதன்முதலாக எந்த மாதத்தில் எந்த நட்சத்திரத்தில் தீர்த்தோற்சவத்தை நிச்சயித்துச் செய்தார் களோ அப்படியே பிரதி வருஷமும் செய்ய வேண்டும். மாறுதலா

கச் செய்யலாகாது. கொடி ஏற்றம் இன்றிச் செய்யப்பெறும் மற்ற உற்சவங்களை இஷ்டப்படி மாற்றிச் செய்யலாம்.

உற்சவத்தின் கிரியைகள் 16 விதமாகும். அவைகளாவன "ப்ரதமஞ்சாங்குரம் கர்மா த்விதீயம் சிகியாககம் த்ரிதீயம் தாட யேத்பேரீம்" சதுர்தமாரோபயேத் துவஜம். பஞ்சமம் யாக கர் மாஸ்யாத் அஸ்திரயாக மத: பரம் ஸப்தமம் பலிதானம் ஸ்யாத் யானகரம் மதாஷ்டமம்: நவமம் பரிவேஷம் ஸ்யாத் நீராஜன மதோ தச ஏகாதசம் கௌது கஞ்ச தீர்த்தசங்கிர ஹணம் பரம் த்ரியோ தசம் சூர்ணகரம் தீர்த்ஞ்சைவ சதுர்தச துவஜாவரோஹணம் பச்சாத் ஸ்நபனம் ஷோடசம்பவேத். (குமாரதந்திரம் உற்சவவிதி படலம்) மேலும் இந்த மஹோற்சவம் 3 பிரிவுகளாக சொல்லப் படுகிறது. அங்குரார்ப்பணம் பேரீதாடனம் துவஜாரோஹணம் என்ற முறையிலும் பேரீதாடனம் துவஜாரோஹணம் அங்குரார்ப் பணம் என்ற முறையிலும் துவஜாரோஹணம் பேரீதாடனம் அங்குரார்ப்பணம் என்ற முறையிலும் செய்யப்பெறும் எந்த முறை யில் முதன்முதல்செய்யப்பெறுகிறதோ அந்த முறையை எப்பொழு தும் கடைப்பிடிக்க வேண்டும்.

## முளையிடுதல் அங்குரார்ப்பணம்

"பாரவன் காண் பாரதனிற் பயிரானுன் காண்,"

என்று திருநாவுக்கரசு சுவாமிகள் சொல்லியபடி பயிர் விளைவுக்குக் காரணமான விதைகளைப் பாலிகைகளிலிட்டு வித்துக்கு அதிபனை சோமனைக் கும்பத்தில் பூஜித்து வழிபடுதல் அங்குரார்ப்பணம் எனப்படும். உத்தம பட்ச மஹோற்சவத்தில் துவஜாங்குரம் உத்ஸவாங்குரம் தீர்த்தாங்குரம் என்று மூன்று வித அங்குரார்ப்பணம் செய்வது உத்தமம். அங்குரார்ப்பணமின்றி உற்சவம் செய்யலாகாது. "அநங்குரத்து ய்த்தகர்ம தத்கர்ம நிஷ்பலம் பவேத்" (குமாரதந்திரம்)

## துவஜாரோஹணம்

துவஜம்-கொடி, ஆரோஹணம்-ஏற்றுதல். இறைவனின் மூர்த்திக்குரிய ஊர்தியே ஆன்மாக்களின் சின்னமாம். அவ்வூர்தியைத் துவஜ படத்தில் எழுதி பிரதிஷ்டைசெய்து ஆச்சாரியார் கொடி மரத்தின் உச்சியில் ஏற்றி வைப்பது துவஜாரோஹணம் எனப்படும். இச்செயலின் தத்துவம் யாதெனின் ஆன்மாக்கள் பாச பந்தம் நீங்கி திருவருட்சக்தியின்மூலம் இறைவனின் திருவடியைப் பற்றி நிற்பதாகும்.

கொடிச்சீலை பசுவாகியஆன்மாவை உணர்த்தும் அது திருவருட் சக்தியாகிய கயிற்றினுல் ஆருதாரங்களையும் கடந்து பதியாகிய கொடி மரத்தில் இணைந்து கொடிமரமும் கொடிச்சீலையும் இரண்டாயினும் பதியில் பசு ஒடுங்கி ஒன்ருயிருப்பதைக்காட்டும் உயிர்கள் தீட்சையினுல் பாசங்களைக் கடந்து பதியுடன் இரண்டறக் கலந்து சிவானுபூதி பெறுகின்றன என்பதையே துவஜாரோஹணம் உணர்த்துகிறது.

"ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிட மொன்று மேலிடில் ஒன்று ஒளிக்குமெனினும் இருளடராது உள்ளுயிர்க்குயிராய்த் தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந்திரிமலத்தே குளிக்குமுயிரருள் கூடும்படிக் கொடி கட்டினனே" என்று கொடிக்கவி உமாபதி சிவம் பாடச் சிதம்பரத்தில் கொடிக்கயிறு தானுகவே கொடிமரம் பற்றி ஏறி நின்றது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

IN13175-015 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

## கொடிச்சீலை

"சுவேத வர்ணதுவஜ படம் ராஜ ராஷ்டிராபி வர்த்தனம்" ("குமாரதந்திரம்") கொடிச்சீலை பசுவாகிய ஆன்மாவைக் குறிப்பதால் ஆன்மாக்கள் சுத்த சத்வகுணஸம்பவன்னுக இருப்பின் சிவத்தையடைந்து சிவானுபூதிபெற முடியுமென்பதை உணர்த்தும், எனவே கொடிச்சீலை வெண்மையாய் இருத்தல் வேண்டும். கொடிக்கயிறு பரை என்னும் திரோதன சக்தியைக் காட்டுந் தன்மையாயமைந்து கொடிச்சீலையில் மறைந்து பிணைத்து நிற்கவும் உயிர்கள் சக்தியின் துணையின்றிச் சிவத்தைப் பேணி நிற்க முடியாது என்பதையுணரவும் கொடிக்கயிறு புதியதாயும் வெண்மையாயும் நடுவில் அறுந்து விடாதிருக்கவும் திடமான நூற்கயிறு கொடிச்சீலையுடன் இருக்க வேண்டும்.

கொடிமரம் பதியை உணர்த்துகிறது. கொடிக்கயிறு பரை என்னும் திரோதான சக்தியைக் குறிக்கிறது. கொடித்துணியில் எழுதப்படும் மயில் பசுவாகிய ஆன்மாவைக் குறிக்கும். கொடிமரத்தில் தனியாக சுற்றப்படும் தர்ப்பைக்கயிறு ஆணவ மலத்தைக் குறிக்கும்.

## பேரீதாடனம்

பேரீ வாத்தியம் அடிப்பது எதற்கு எனில் பேரீ வாத்தியத்தில் விதிப்படி பூசித்து மும்முறை வேத மந்திரத்துடன் அடிக்க முதல் தாடனத்தினுல் அசுரத்தன்மை அழிந்து முவ்வுலகினுள்ளவர்க்கும் இதம் உண்டாகும்.

இரண்டாவது தாடனத்தினுல் மால் அயன் முதலியோர்களுக்கும் மகரிஷிகளுக்கும் பசு, பக்ஷி, முதலியவற்றிற்கும் இத முண்டாகும். 3வது தாடனத்தினுல் சகல புவனங்களுக்கும் இதமும் சுகமும் உண்டாகும்.

## ரக்ஷாபந்தனம் (காப்பணிதல்)

உலகினுள்ள ஆன்மாக்கள் யாவற்றுக்கும் சாம்பவீ தீக்ஷையாக மஹோற்சவம் ஏற்பட்டிருப்பதால் மஹோற்சவ கிரியை இடையூறின்றி நடக்கவும் மேற்படி கிரியைசித்தி பெறவும்

ஆச்சார்யார் ரக்ஷாபந்தனம் செய்து கொள்ளுதல் வேண்டும் இறை மூர்த்தங்களுக்கு ரக்ஷாபந்தனம் செய்வது தாய் தன்குழவியின் நோய் நீங்க மருந்துண்பது போன்றது. ஆன்மாக்களின் மல நீக்கம் காரணமாய் சுவாமிகளுக்கு ரக்ஷாபந்தனம் செய்விக்கப் படுகிறது.

## உற்சவம்

இறைவன் சிற்சக்தி மாத்ரத்தினுலே (மனேபாவனை யாலேயே) சகல ஆன்மாக்களுக்கும் செய்விக்கும் சாம்பவ தீக்ஷை யாக உற்சவம் செய்யப்படுவதால் அது தீக்ஷாகாலமென அறிய வேண்டும்.

## யாகசாலை

உற்சவத்தில் யாகசாலை யமைக்க வேண்டும். உயிர்கள் அத்வசுத்தி யுக்தமான தீக்ஷையினுலேயே பாசநீக்கம் பெற்றுச் சிவானுபூதி பெறமுடியுமாதலாலே வர்ணம், மந்திரம், பதம், புவனம், தத்துவம், கலை என்ற அத்வாக்களின் ஸ்வரூபமாய் யாகசாலையை அமைத்து மண்டலம் கும்பம், அக்னி, ஆச்சார்யார், சிஷ்யர்களாகிய ஆன்மாக்கள் என்ற ஐந்திடம் தன்னிலும் இறைவன் நின்று அனுக்கிரஹிப்பதைக் காட்டக் குண்ட மண்ட லங்களுடன் தினம் அதில் வேள்வி செய்தல் அவசியமாகும்.

## பொரியிடுதல்

இதை லாஜபுஸ்பம் சாத்துதல் என்று சொல்வது வழக்கம். உமிநீங்கிய நெல் பொரி சுத்த ஸத்வ குணத்தைக்காட்டும் இதை இறைவன் திருவடியில் ஆச்சார்யர் சமர்ப்பணம் செய்வது யாக சாலையில் மலநீக்கம் பெற்ற சுத்தான்மாக்களை இறைவனிடம் சேர்ப்பித்தலாகும். உற்சவம் இறைவனின் பஞ்சகிருத்யத்தில் சேர்ந் ததாகும். பஞ்சகிருத்தியமாவது ஐந்து தொழில்களாம். ஸ்ருஸ்டி, தனுகரண புவன போகங்களின் படைப்பு உற்சவத்தில் செய்யப் படும் கிரியைகளில் அனுக்ஞையை, வாஸ்துசாந்தி, அங்குரார்ப் பணம், பேரிதாடனம், ரக்ஷாபந்தனம், மயூரயாகம், அஸ்திரமூர்த்தி தேவநாவாஹணம் கொடிஏற்றம், துவஜபலி, சந்தி யாவஹணம், ஊர்வலம், கோபுரவாயிற்படியில் கற்பூர நீராஜனம், யாகசாலை பூஜை, நவசந்திபலி, திருக்கல்யாணம் என்பவை ஸ்ருஷ்டி கிருத்

யம், என்ற இறைவனின் படைப்புத்தொழிலாகும். யாக ஹோமம் ஹோம காலத்தில் செய்யும்பலி வாஹனத்தில் எழிந்தருளுவது முதலியன திதி கிருத்யம் என்ற காப்புத்தொழிலாகும்.

மிருக யாத்திரை என்ற பரிவேட்டை திருத்தேர்விழா கிருஷ்ண கந்தம் என்ற திருச்சாந்துசேவை இவை ஸங்காரகிருத்திய மென்ற லயத்தொழிலைக்குறிப்பதாகும். உற்சவத்தின் மத்தியத்தில் 6வது நாள் காலை 10 நாள் காலை செய்யப்படும் சுண்ணமிடித்தல் என்ற சூர்ணோத்ஸவமும். தீர்த்தவாரி குடமுழுக்கு கொடி இறக்குதல் மௌனோற்சவம், காப்பு களைதல், பாலிகை விடுதல், சண்டேசயாகம், இவை இறைவன் ஆன்மாக்களாகிய உயிர்கள் சிவஞானம் பெறும் காலத்தில் பாச ஞானத்தை மறைத்தலாகிய திரோதானச் செயலாம். 10 வது நாள் நடைபெறும் சக்தி யாத்திரை என்ற திருஊடல் சண்டேசுவரர் உற்சவம். ஆசார்ய உற்சவம், இறைவனின் திருவருள் பெறுதலாகிய அனுக்ரஹ கிருத்தியமாகும் ஆகவே மஹோற்சவத்தில் எந்தக்கிரியைகளையும் விடாது செய்விக்க வேண்டும். இந்த மஹோற்சவ கிரியைகள்யாவும் உலகின் கண்ணுள்ள எல்லா உயிர்கட்கும் (அண்டசராசரங்கள் யாவற்றுக்கும்) அத்வ சுத்தி யுக்தமான தீக்ஷாப்பயனையும் முடிவில் தீர்த்தோற்சவம் ஆசார்யாபிஷேகப் பலனையும் கொடுக்கும்.

## வாகனங்கள்

உற்சவகால வாகனங்களில் விளக்கம்:

முதல்காலை மாலை இருவேளையும் முருகப்பெருமானுக்கு மஞ்சத்தில் புறப்பாடு. மறுநாள் முதல் காலையில் மஞ்சத்திலும் இரவு வாகனங்களிலும் புறப்படுவது முக்கியம். 2வது நாள் இரவு பூதவாகனமும் 3வது நாள் சிங்க வாகனமும் நான்காம் நாள் இரவு நாகவானம் அல்லது யானை வாகனம் ஐந்தாம் நாள் இரவு மயில் வாகனமும் 6வது தினம் கற்பக விருஷம் 7வது நாள் திருத்தேரும் மாலையில் மஞ்சஉற்சவமும், 8வது நாள் மாலையில் குதிரை வாகனமும் 9வது நாள் காலை மாலை இரு வேளைகளிலும் மஞ்சத்திலும் எப்பொழுதும் இரவு வாகனங்களிலும் காலையில் மஞ்சத்திலும் புறப்பாடு செய்தல் வேண்டும்.

IN13175-018 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

7வது நாள் காலை திருத்தேரில் ரதாரோஹணம் நல்ல சுப யோக சரலக்கனத்தில் ஐந்தாம் பாவம் சுத்தமாயும் நிஷ்பஞ்சக மாயுள்ள வேளையில் செய்வித்து இரதாரோஹணத்திற்கு முன் யாத்ராதானம் முக்கியமாய் செய்து இரத வடம் பிடித்து இழுக்க வேண்டும். ரத உற்சவத்தில் ரத பிரதிஷ்டை செய்து பின்பு புறப்பட வேண்டும் ரத பிரதிஷ்டைக்கு பின் ரதத்தில் பெருமானை எழுந்தருளச்செய்து ஊர்வலத்திற்குப்பிறகு ஆலயத்தில் பிரவேசிக்க செய்தலும் பின் நீர், மோர், பானகம் வடைபருப்பு, தேங்காய் நிவேதிக்க வேண்டும்.

மஹோற்சவம் என்ற சொல் உயர்வான படைப்பு முதலிய ஐந்தொழிலைக்குறிக்கும். இதன் பொருள் எம்பெருமானை ஊர்தி களில் வைத்து வீதி வலம் வரச்செய்வதால் துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் செய்து மூவுலகங்களையும் அனுக்ரகிப்பதேயாம். மல நோய் கண்ட ஆன்மாக்களுக்குத் தூல சூக்ஷ்மமான பிரபஞ்சங்கள் என்ற மருந்தை யூட்டி அஞ்ஞானமகற்றி சிவஞானத்தை அருளு வதே உற்சவ விளக்கமாகும். 10ஆம் நாள் உற்சவம் தத்துவ ஞானம் தத்துவதர்சனம், தத்துவ சுத்தி, ஆன்மஞானம், ஆத்மதர் சனம், ஆத்ம சுத்தி, சிவஞானம், சிவதர்சனம், சிவயோகம் என்ற பத்து விதமான காரியங்களின் அறிகுறியாக 10ஆம் நாள் விழாச் செய்யப்படுகிறது.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களில் நின்று பதமுக்தி நான்கினைப்பெற முடியாத ஆன் மாக்களுக்கு சிவன் தன் திருவடியைப்பெற்றுய்ய சிவதீட்சையாக செய்யப்படுவதே மகோற்சவத்தின் சிறப்பாகும்.

முதல் நாள் விழா ஸ்தூலப்பிரபஞ்சத்திலிருந்து விடுபட ஏற்பட்டது. 2வது நாள் விழாவிற்கு சூக்ம உலகில் நின்றும் நீங் குதல் பலனாகும். 3வது நாள் விழாவின் தத்துவம் யாதெனில் ஈசணாத்ரயம், குணத்ரயம் முதலியவைகளின் நீக்கமாம். மனம், புத்தி, அகங்காரம் சித்தம் என்ற அந்தகரணங்களினின்றும் அண்டஜம், ஜராயுஜம், உத்பீஜம், சுவேதஜம், என்ற நான்கு வகை தோற்றத்தில் நின்று நீக்கம்பெறும் காரணமாய் அமைந்தது நான்காம் நாள் திருவிழாவாகும். ஜாக்ரத், ஸ்வப்னம், சுழுத்தி,

IN13175-019 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

துரியம், துரியாதீதம் என்ற ஐந்து அவஸ்தைகளினின்று விடுவிப்பது 5ஆம் நாள் திருவிழாவாகும். காமம், குரோதம், கோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்ற ஆறையும் நீக்குவது 6ஆம் நாள் திருவிழாவாகும்.

மாயாமல குணமேழும் ஏழ்வகைப்பிறப்பும் நீக்குவதே ரதோற்சவம் விழாவின் நோக்கமாகும். இறைவனின் எட்டு வித குணங்களையும் காட்டி நிற்பதே 8ஆம் நாள் விழா. இறைவன் மூன்று உருவங்களிலும் முத்தொழிலும் மூன்று இடத்தில் உறைதலும் ஆக 9தும் இல்லை என்பதையறிவதே ஒன்பதாம் நாள் திருவிழா. 10வது நாள் தீர்த்த வாரி விழா உயிர்கள் யாவற்றையும் சிவானந்த சாகரத்தில் ஆழ்த்திச் சிவபோகத்தை அடையச் செய்வதேயாகும்.

மேலும் மஹோற்சவத்தில் அங்குரார்ப்பணம், பேரீதாடனம், துவஜாரோஹணம், தேவாதாவாஹனம், யாகசாலை, மண்டபம், யாகம், பலிதானம், வாகனஉற்சவம் சூர்ணோத்சவம், கிருஷ்ணகந்தம், தீர்த்தவாரி, யாக கும்பாபிஷேகம், மௌனோத்சவம், சண்டயாகம், ஆசார்ய உற்சவம், ஆகியவை மிகமுக்கியமாகும். இவை அனைத்தும் பற்பல சமயதத்வ விளக்கம் கொண்டவையாகும்.

வீதிவலம் நடைபெறும் காலத்தில் சண்டை கலகங்கள் ஏற்படலாகாது. பலிஹீனம், யானஹீனம், யாகஹீனம், கற்பூர நீராஞ்ஜன ஹீனம் முதலியன ஏற்பட்டால் பிரயாச்சித்தம் சொல்லப்பட்டிருப்பதால் பக்தி சிரத்தையுடன் லோப மின்றியும் கவனம் செலுத்தி உற்சவங்களை செய்விக்க வேண்டும்.

உற்சவத்தின் பயனாய் மெய்யன்பர்கள் ஸ்கந்த லோகமடைந்து பேரின்ப முக்தியடைவார்கள்.

சுபம். முற்றும்.

IN13175-020 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

உ சிவமயம்

# கந்த சஷ்டி விரதம் அனுசரிக்கும் முறை

கந்த ஷஷ்டி ஆறு நாட்களும் இந்த விரதம் கைக் கொள்ள வேண்டும். அதை கீழ்கண்ட முறைப்படி கடை பிடிக்கலாம். அதாவது ஆறு நாட்களும் காலையில் செய்ய வேண்டிய நித்திய கர்மங்களை முடித்துக் கொண்டு, குளித்து சுத்தமான உடை, திருநீறு அணிந்து, முருகப் பெருமானுடைய திருக் கோயிலுக்குச் சென்று, மலர், இட்டு, விதிப்படி வலம் வந்து திருப்புகழ், திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தர் அனுபூதி இவைகளை ஓதி, உள்ளம் உருகி ஒருமையுடன் வழிபட வேண்டும். ஆறுநாட்களும் பூரண உபவாசம் இருக்க முடிந்தவர்கள் துளசி தண்ணீரைத் தவிர வேறு ஒன்றும் அருந்தக் கூடாது. சூர சம்ஹாரம் முடித்தவுடன். பால் பழம் மட்டும் சிறிது சாப்பிட வேண்டும். பிறகு மறுநாள் வழக்கம் போல் சாப்பிடலாம். பூரண விரதம் இருக்க முடியாதவர்கள், ஐந்து நாட்கள் பால் பழமுண்டு, சஷ்டியன்று முழு உபவாசமாக இருக்க வேண்டும்.

இதுவும் முடியாதவர்கள், ஐந்து நாட்கள் உச்சி வேளையில் இறைவனுக்கு நிவேதித்த உணவை உண்டு, இரவு பட்டிணியாக இருந்து, ஆருவது நாள் மிகவும் அன்புடன் உபவாசமாக இருந்து வழிபட வேண்டும்.

உ

அண்ணாமலையார் துணை

# பவித்ரோற்சவ விளக்கம்

திருக்கோயில்களில் சமயம் விஷேசம் நிர்வாணம் என்னும் தீக்ஷை மூன்றையும் பெற்று ஞானஸ்னானமாய் விளங்கும் ஆசார்யாபிஷேகம் செய்விக்கப்பட்ட ஆதிசைவ சிவத்விஜர்களே உலக முய்ய செய்யப்படும் பரார்த்த பூஜைசெய்ய அருகதையுள்ளவர்கள் ஆவார். அன்னார்கள் செய்யும் கோயிற் பூசையில் சிவாகம விதிப்படி மந்தரலோபம், கிரியாலோபம், திருவியலோபமும் இராசோபசார குறைகளும் ஆத்யான்மீகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் மென்ற துக்கங்களும் நிவர்த்தியாகி சிவபூசையின் பயனை ஆன்மாக்கள்யாவும் போகமோக்ஷங்களைப் பெற்றுய்ய நித்யாங்கமாய் விதிக்கப்பட்டதே "பவித்ரோற்சவம்" என்பதாகும்.

"பவித்தரம்" என்றச் சொல் பரிசுத்தத்தை குறிக்கும் அதாவது ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலமும் நீங்கப் பெற்ற மாசிலாத்தன்மையைக் குறிக்கும். ஆதிதைவிகமான துன்பமாவது யாதெனில் தாயின் கர்ப்ப வாஸத்திலிருக்கும், துன்பம், ஜனன மரணதுக்கம், நாகபயம், யமவாதனை முதலியவற்ருல் வரும் துன்பம் ஆதியாத்மீகமாவது நமது உடல், மனம், வாக்கு என்ற திரிகரணங்களால் செய்யப்படும் துன்பம் மேலும் பூதப்ரேத பிசாசங்கள் மிருகங்கள், அரசர்கள், மனிதர்களால் ஏற்படும் துன்பங்கள் ஆகும். ஆதிபௌதிகமாவது நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களால் ஏற்படும் குளிர், வெப்பம். மழை, மின்னல், இடி, பூகம்பம், சுழல்காற்று முதலிய துன்பங்களாகும். ஆக ஆதிதைவிகம் முதலியவற்ருல் ஆன துன்பங்களிலிருந்து விடுபடவே திருக்கோயில்களில் பவித்ரோற்சவம் செய்வதன் நோக்கமாகும்.

பவித்ரம் என்ற சொல்லால் குறிப்பிட்ட பூணூலுக்கு யஞ்ய சூத்திரம், உபவீதம் என்ற பல பெயருமுண்டு. பூணூல் என்பது இறைவனுக்கு பூணப்படும் நூல் என்றும் பூ: புஷ்பம் போல் மணமுடைய நூலாகும். மணமாவது யாதெனில் பூர்வ கர்மவாசனையாகும் ஆகவே அதனை நீக்க இறைவனுக்கு பவித்ரம் என்ற பூணூலை அணிவிக்க வேண்டும். "யஞ்யசூத்ரம்" சூத்ரம் நூல், யஞ்யம் வேள்வி. வேள்வியாவது தன்னிட முள்ள பொருளை இறைவனுக்கு அர்ப்பணித்தலாகும் தன்னிடமுள்ள பொருளாவது யாதெனில் நாம் செய்த வினைபயன்களாகும். ஆகவே யஞ்சூத்ரம் என்ற பூணூலை இறைவனுக்கு அர்ப்பணிப்பதன் மூலம் நம் வினைகளைக்களைந்து உயிர்களை பவித்ரமாக்குதலால் பவித்ரம் எனப்பட்டது "பவித்ரம் பதனத்ராணஹேது'' என்ற நிர்மலமான, நிர்குண, நிராமய, நித்ய, சுத்தபுத்தனை சிவத்தைக் குறிக்கும் சொல்லாம்.

ஆக மேற்கூறிய சிவத்தைப் பேணிச்செய்யும் தெய்வீக காரியங்களை செய்யும் சுத்தாத்மா அணியும் பூணூல் பிரம்ம சுத்ரமென்று சொல்லப்பட்டது. உபவீதம் என்பது யாதெனில் தேவகார்யங்கள் செய்யும் பொழுது பூணூலை வலமாக அணிவதேயாகும். இப்படி உத்தமமான "பூணூல்'' என்ற பவித்ரத்தை ஆண்டு தோறும் ஸுவர்ணம், ரஜதம், பட்டு, பருத்தி நூல்களால் செய்து யாகசாலையமைத்து மண்டப மத்தியில் பஞ்சவர்ணங்களால் மண்டலேசுவரரையும் 27 பரிவாரங்களுடன் யாகேசுவரன் யாகேசுவரியையும் பூசனை செய்து யஞ்ய குண்டத்தில் சிவாக்னியை பூஜித்து தர்ப்பண தீபன ஹோமங்கள் செய்து உயிர்கள் செய்யும் வினைகளுக்கு சாக்ஷியாய் எழுந்தருளியுள்ள மண்டலேஸ்வரரிடம் விண்ணப்பம் செய்து பவித்திரத்தை ஆலயத்திலுள்ள சகல தேவர்களுக்கும் ஆமந்திரண புரஸ்ஸரகமாக சமர்ப்பித்து யாக பூர்த்தியின் பொருட்டு பூர்ணாஹுதி செய்து திருவிழா கோலமாக வீதிவலம் செய்வித்தல் பவித்ரோற்சவம் என்பதாகும்.

இதன் தத்துவம் யாதனில் ஸர்வஞ்யத்துவம் முதலிய எண் குணமுள்ள இறைவன் அருவத்திருமேனியுடையவனாதலால் வருடம், அயனம், ருது மாதம், பக்ஷசம், தினம், யாமம், கடிகை, நிமேஷம், த்ருடி, லவம் என்ற கால பேதத்தினால் கால சுவரூபியாய் உயிர்கள் செய்யும் வினைகளுக்கு சாக்ஷிபூதனாய் விளங்குகின்றான். ஆதலால் போக மோக்ஷங்களின் காரணமாய் உயிர்கள் செய்யும் குற்றம் குறைகளை அவன் ஒருவனேயறிவானாதால் பவித்ர சூத்ரகும்மிதமான கர்ம பலனை அவனிடமே யர்ப்பணித்து நித்யபூஜையில் கண்ட தோஷங்களுக்குப்பரிஹாரமாய் செய்யும் பெருஞ்சாந்தியே பவித்ரோற்சவம் எனப்படும்.

"கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சுரமமர்ந்தான் பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்'' என்று ஆளுடைய பிள்ளையாராகிய ஞானசம்பந்தரும்

"ஆடி பூரட்டாதிக்குட் புகழ் பதிநான்கு அட்டமிகளில் ஒன்றின் பூசை தரும்தகுதி, மிகுதி குறை தவறு நீங்கதந்து நவந்தரு பந்தற்சமயத்தியாகம் பரந்த விருதாங்கமுடன் பவித்ரத்தைப் பயில் வித்து'' என்று புராணங்களிலும் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும் பவித்ரோற்சவம் 'குமாரதந்தரம்'' பவித்ராரோபண விதிபடலத்தில் சம்வத்சரக்ருதம் பாபம்- நாசயத்யஸ்யபூஜனாத் ப்ராயசித்த மகுர்வாண: பிராம்மணா: சுத்திமாப்னுயு:

முருகப்பெருமானார்க்கு பவித்ரோற்சவம் செய்வதனால் நாள்தோறும் செய்யும் பூசையில் ஏற்படும் குற்றங்குறைகளை பிராயச்சித்தம் செய்யாத சிவத்விஜர்கள் ஓராண்டு செய்த பாபங்களைக் களைந்து சுத்தியடைகிறார்கள். தினந்தோறும் வாக்குமன காயங்களால் ஏற்பட்ட பாபங்களினின்றும் உயிர்களை பவித்ரமாக்குவதினால் இதை பவித்ரோற்சவம் என்று கௌசிகருக்கு முருகப் பெருமான் சொல்லியிருக்கிறார்.

## பவித்ரோற்சவ காலம்:

"ஆஷாடாதி த்ரயோ பேதா: ச்ரேஷ்ட மத்யம கன்யஸா: என்று குமாரதந்திரத்தில் கூறியபடி ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்கள் முறையே உத்தமம், மத்யமம், அதமமாக எடுக்கப்பட்டிருக்கிறது. மேற்கூறிய மாதங்களில் ஆடிமாதம் வளர்பிறை சதுர்த்தசியிலாவது அல்லது ஆவணி, புரட்டாசி மாதங்களில் இரண்டு பக்ஷங்களிலும் சதுர்த்தசி, ஷஷ்டி, பூர்ணிமை காலங்களிலாவது செய்வது சிறந்தது. எப்படியும் கார்த்திகை தீபத்திற்கு பிறகு செய்ய கூடாது என்றும் கூறப்பட்டுள்ளது.

IN13175-022 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

பவித்ரோற்சவத்தில் பட்டுநூல், பருத்தி நூல்களால் பவித்ரம் செய்து அத்துடன் சீப்பு, பற்குச்சி, எண்ணை, நெல்லிகனி, குடை, கைத்தடி, மான்தோல், தர்பை, ஈருள்ளி, கமண்டலம் ஜபமாலை வெண்சாமாரம், தீர்த்த பாத்ரம், பாதுகை, முதலிய வருதாங்களை சிவாக்னியில் ஸம்பாதஹோமம் செய்து அதற்குரிய மந்தரங்களைக் கொண்டு சுவாமிக்கு நிவேதனம் செய்தல் அவஸ்யம், வ்ருதாங்கம் போகாங்கம் என இரண்டு விதமான பொருள்களாகப் பிரிக்கப்படுகின்றன.

வ்ருதாங்கமான பொருள்கள் ஆவது ஜபமாலை, தண்டம், பற்குச்சி, ம்ருத்திகை வீபூதி, ஜலம், ஜலபாத்ரம், நெல்லிகனி, ஆகியவையாகும் ஹோம உபயோகமான பசும்பால், பசும்தயிர், நெய், கோஜலம், கோமயம், குடை, சாமரம், ஆஸனம் பாதுகை, யோகபட்டம், சரு, நெய், சந்தனம், பச்சை கற்பூரம், அகரு, குங்குமப்பூ, கோரோஜனை, தாம்பூலம், சீப்பு, கண்ணுடி, ஈருள்ளி, முதலியன போகாங்கமான பொருள்களாகும் பவித்ர விதியை ஆசார்யன் முன்னிலையில் செய்வது முக்கியமாகும்.

இப்படி உத்தமமான பவித்ர விதியை அனுஷ்டித்தால் சராசாங்களிலுள்ள எல்லா உயிர்களும் ஆதி பௌதிகம் என்ற மழை, புயல், வெள்ளம், பூகம்பம், இடி, மின்னல் முதலியவைகளால் ஏற்படும் கஷ்டங்களிலிருந்தும் ஆத்யாமீகம் என்ற மனம், வாக்கு, காயம், திரிகரணங்களால் செய்த பாபங்களிலிருந்தும் ஆதிதை விகம் என்ற மாத, பித்ரு, கர்ப்பவாஸ ஜனனமரணதுக்கங்களிலிருந்தும் விடுபடுகின்றனர்.

சுபம், மங்களம், சுபம்.

சிவாகம ரத்னம் ஆகம ஆசிரியர்
கே. ஏ. சபாரத்ன சிவாச்சாரியார் சுவாமிகள்
சென்னை.



गायत्री காயத்ரி GAYATRI

உ ஓம் சக்தி

# காயத்ரி மகா மந்திரம்

ओं भूर्भुवस्सुवः
ओं तत् सवितुर्वरेण्यं
भर्गो देवस्य धीमहि ।
धियो यो नः प्रचोदयात् ॥

ஓம் பூர்புவஸ்ஸுவ:
ஓம் தத் ஸவிதுர்வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி ।
தியோ யோ ந: ப்ரசோதயாத் ॥

ओं तत् सवितुः वरेण्यं
भर्गः देवस्य धीमहि
धियः यः नः प्रचोदयात्

ஓம் தத் ஸவிது: வரேண்யம்
பர்க: தேவஸ்ய தீமஹி
திய: ய: ந: ப்ரசோதயாத்

ய: யார் ந: நம்முடைய திய: அறிவை பிரஸோதயாத் தூண்டுகிருரோ தத் அந்த தேவஸ்ய சுடருடைய ஸவிது: கடவுளின் வரேண்யம் மேலான பர்க: ஒளியை தீமஹி தியானிப்போமாக யார் நம் அறிவைத் தூண்டுகிருரோ அந்தச் சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக.


❊ சூரிய நமஸ்காரம் ❊

பெருமை தங்கும் எண்ணத்தினை யுடையவன்
பேஊறிவொ குகண்ம மருவு தர்கசொருகாரணமானவன்
மறையுறு வினனளித்த இருளும் தானவர் மாய்கையும்
துறப்பவதரியாவருந்தொழுதேத்தும்
பெருவிலாத பேரொளிவளர்
பரிதியைப் புலரியிற் தொழுகின்றேன்.

IN13175-023 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

உ ஓம் ஸ்ரீ கணேசாய நம

# சமய குரவர் நால்வர்



திருஞான சம்பந்தர் — அப்பர் திருநாவுக்கரசு — சுந்தர மூர்த்தி சுவாமிகள் — மாணிக்கவாசக சுவாமிகள்

1. பூமியர்கோன் வெப்பொழித் தபுகழியர் கோன் கழல் போற்றி
ஆழி மிசை கல் மிதப்பில் லணைந்த பிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி
ஊழிமழி திருவாத ஊரர் திருத்தாள் போற்றி

2. உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன் நிலவுலாவிய நீர்மலிவேணியன்
அலகில் ஜோதியன் அம்பலத் தாடுவான் மலர்சிலம்படி வாழ்த்திவணங்குவாம்.

3. அண்டவாணர் தொழதில்லை அம்பலவரடியெடுத்து உலகெ லாமெனத்
தொண்டர் சீர்பரவு சேக்கிளான் வரிசைதுன்று குன்றை நகராதிபன்
றண்டகாதிபதி திருநெறித் தலைமை தங்கு செங்கைமுகில் பைங்கழல்
புண்டரீகமலர் தெண்டனிட்டு வினைபோக்குவார் பிறவி நீக்குவார்.

4. தொகைநாவ லூராளி தொடுத்ததிருத்தொண்டப் பெருமை
வகையால் விளங்க உயர் நம்பியாண்டார் வகுப்ப மற்றதனைத்
தகையா அன்பின் விரித்துலகோர் தம்மை அடிமைத் திரப்பாட்டின்
உகையா நின்றசேக்கிளான் ஒளிர் பொற்கமலத்தாள் பணிவாம்

உ ஓம் சிவாயநம:

எந்நாளும் ஓதுதற்குரிய திருமறை

## திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்தது

# கோளறு திருப்பதிகம்

தோடுடையசெவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப் பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமலரான் முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிரமா புரமேவிய பெம்மானிவனன்றே.

வேயுறுதோளிபங்கன் விடம்உண்டகண்டன் மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள்கங்கை முடிமேலணிந்தென் உளமேபுகுந்தஅதனால்
ஞாயிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழன்வெள்ளி சனிபாம்பிரண்டுமுடனே
ஆசறுநல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்குமிகவே. 1

என்பொடுகொம்பொடாமை இவைமார்பிலங்க எருதேறி யேழையுடனே
பொன்பொதிமத்தமாலை புனல்சூடிவந்தென் உளமேபுகுந்த அதனால்
ஒன்பதொடொன்றொடேழு பதினெட்டொடாறும் உடனாயநாள்கள்
அவைதாம்
அன்பொடுநல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்குமிகவே. 2

உருவளர்பவளமேனி ஒளிநீறணிந்து உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர்கொன்றைதிங்கள் முடிமேலணிந்தென் உளமேபுகுந்த அதனால்
திருமகள்கலையதூர்தி செயமாதுபூமி திசைதெய்வம்ஆனபலவும்
அருநெதிநல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்குமிகவே. 3

மதிநுதல்மங்கையோடு வடபாலிருந்து மறைஓதும் எங்கள்பரமன்
நதியொடுகொன்றைமாலை முடிமேலணிந்தென் உளமேபுகுந்தஅதனால்
கொதியுறுகாலன்அங்கி நமனோடுதூதர் கொடுநோய்களானபலவும்
அதிகுணம்நல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்குமிகவே. 4

நஞ்சணிகண்டன் எந்தை மடவாள்தனோடும் விடையேறுநங்கள்பரமன்
துஞ்சிருள்வன்னிகொன்றை முடிமேலணிந்தென் உளமேபுகுந்தஅதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியுமின்னு மிகையானபூதம்அவையும் 5
அஞ்சிடு நல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்குமிகவே.

வாள்வரி அதளதாடை வரிகோவணத்தர் மடவாள்தனோடும்உடனாய்
நாள்மலர்வன்னிகொன்றை நதிசூடிவந்தென் உளமேபுகுந்தஅதனால்
கோளரிஉழுவையோடு கொலையானைகேழல் கொடுநாகமோடுகரடி 6
ஆளரிநல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்குமிகவே.

செப்பிளமுலைநன்மங்கை ஒருபாகம்ஆக விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிளமதியும் அப்பும் முடிமேலணிந்தென் உளமேபுகுந்தஅதனால்
வெப்பொடுகுளிரும்வாத மிகையானபித்தும் வினையானவந்துநலியா 7
அப்படிநல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்குமிகவே.

வேள்படவிழிசெய் தன்று விடைமேலிருந்து மடவாள் தனோடும் உடனாய்

IN13175-025 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

வாண்மதிவன்னி கொன்றை மலர்சூடிவந்தேன் உளமேபுகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்தனோடும் இடரானவந்துநலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவை நல்லநல்ல அடியாரவர்க்குமிகவே. 8

பல பலவேடமாகும் பரன் நாரிபாகன் பசுஏறுமெங்கள்பரமன்
சலமகளோடெருக்கு முடிமேலணிந்தென் உளமேபுகுந்த அதனால்
மலர்மிசையோனும்மாலு மறையோடுதேவர் வருகாலமானபலவும்
அலைகடல்மேருநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்குமிகவே. 9

கொத்தலர்குழலியோடு விசையற்குநல்கு குணமாயவேடவிகிர்தன்
மத்தமும்மதியும்நாக முடிமேலணிந்தென் உளமேபுகுந்த அதனால்
புத்தரொடமணைவாதி லழிவிக்கும் அண்ணல் திருநீறுசெம்மைதிடமே
அத்தகுநல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்குமிகவே. 10

தேனமர்பொழில்கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி வளர்செம்பொன்
எங்கும்நிகழ
நான்முகனாதியாய பிரமாபுரத்து மறைஞானஞான முனிவன்
தானுறுகோளும்நாளும் அடியாரைவந்து நலியாதவண்ணம்உரைசெய்
ஆனசொல்மாலையோதும் அடியார்கள்வானில் அரசாள்வர்ஆணை நமதே. 11

உ நமச்சிவாய

எந்நாளும் ஓதுதற்குரிய திருமறை

## திருநாவுக்கரசு சுவாமிகள்

## திருவாய் மலர்ந்தருளியது

# திருசிற்றம்பலம்

1 சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

2 பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.

IN13175-026 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

3 விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணநின் றறுப்பது நமச்சி வாயவே.

4 இடுக்கண்பட் டிருக்கினும் இரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினும் அருளின் நாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.

5 வெந்தநீ றருங்கலம் விரதிகட் கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழும் நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே.

6 சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க் கல்லால்
நலமிலன் நாள்தொறும் நல்கு வான்நலன்
குலமிலர் ஆகிலும் குலத்துக் கேற்பதோர்
நலம்மிகக் கொடுப்பது நமச்சி வாயவே.

7 வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச்சென்று உருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே.

8 இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

9 முன்னெறி ஆகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறியே சென்றங் கடைந்தவர்க் கெல்லாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே.

10 மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்து
ஏத்தவல் லார்தமக்கு இடுக்கண் இல்லையே.

IN13175-027 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

உ ஓம் சிவாய நம

திருச்சிற்றம்பலம்

## எம்பிரான் தோழர்

## சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த

# திருத் தொண்டத் தொகை

தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே யென்னாத இயற்பகைக்கு மடியேன்
இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக்காளே 1

இலைமலிந்த வேல்நம்பி யெறிபத்தர்க் கடியேன்
ஏனாதி நாதன்ற னடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்
கடவூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ்சாறன்
எஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியேன்
அலைமலிந்த புனல்மங்கை யானார்க் கடியேன் 2
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினா லெறிந்த
அம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியேன் 3
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே

IN13175-028 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் னடியார்க்கும் மடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கு மடியேன்
ஒரு நம்பி அப்பூதி அடியார்க்கு மடியேன்
ஒலி புனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க் கடியேன்
அருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே 4

வம்பரு வரிவண்டு மணநாற மலரு
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியேன்
ஏயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன்
நம்பிரான் திருமூல னடியார்க்கு மடியேன்
நாட்டமிகு தண்டிக்கு மூர்க்கர்க்கு மடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே 5

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியார்க்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன்
கார்கொண்ட கொடைக் கழறிற் றறிவார்க்கு மடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியேன் 6
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
பொழிற் கருவூர்த் துஞ்சிய புகழ்சோழர்க் கடியேன்
மெய்யடியா னரசிங்க முனையரையர்க் கடியேன்
விரிதிரைசூழ் கடனாகை யதிபத்தர்க் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற் சத்தி வரிஞ்சையர்கோனடியார்க்கு மடியேன்
ஐயடிகள் காடவர்கோனடியார்க்கு மடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே 7

IN13175-029 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்
துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியேன்
அறைக்கொண்ட வேலநம்பி முனையடுவார்க் கடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக்காளே 8

கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனுஞ் செருத்துணைத னடியார்க்கு மடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மே லரவாட வாடி
பொன்னடிக்கே மனம் வைத்த புகழ்த்துணைக்கு மடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கு மடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மாஞக் காளே 9

பத்தராய்ப் பணிவார் ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்குமடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலு மடிச்சார்ந்த வடியார்க்கு மடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே 10

மன்னியசீர் மறைநாவ னிறன்வூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கு மடியேன்
தென்னவனு யுலகாண்ட செங்கணர்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனர்க் கடியேன்
என்னவனு மரனடியே யடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க் கோன்
அன்னவனு மாரூர னடிமைகேட் டுவப்பார்
ஆரூரி லம்மானுக் கன்பராவாரே. 11

திருச்சிற்றம்பலம்

IN13175-030 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

உ ஓம் சிவாயநம

எந்நாளும் ஓதுதற்குரிய திருமுறை

## மாணிக்கவாசகர் சுவாமிகள்

## அருளிச்செய்த

# திருவாசகம்

# சிவபுராணம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

IN13175-031 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழுலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

INSTITUT FRANCAIS D'INDOLOGIE
PONDICHERY

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாக வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியா இயமான னும்விமலா
பொய்யா யின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள்ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

IN13175-032 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குத்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற்கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்இருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுர்வே
போக்கும் வரவும் புணர்வும்இலாப் புண்ணியனே
காக்குமெம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வால்

IN13175-033 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன்அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

சிவா திருச்சிற்றம்பலம்

உ ஓம் சிவமயம் திருச்சிற்றம்பலம்
மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலையில்
திருவாய் மலர்ந்து அருளிச் செய்த
திருவாசகம்

# திருஎம்பாவை

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லலறுத்து ஆனந்தமாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் எனுந்தேன்.

உஓம்திருவாசகம்–திருவெம்பாவை மனோன்மணி சர்வபூத தமனியை எழுப்புதல் பாடல்-1

ஆதியும் அந்தமும்இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேஎன்னே!
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்!

IN13175-034 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

உ ஓம் திருவாசகம்-திருவெம்பாவை சர்வபூததமனி பெலப்பிரமதனியை எழுப்புகிறாள் பாடல்-2

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய்? நேரிழையீர்
சீசி இவையும் சிலவோ? விளையாடி
ஏசு மிடம்ஈதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைசிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்?

உ ஓம் திருவாசகம்- திருவெம்பாவை பெலப்பிரதமதனி பெலவிகரணியை எழுப்புகிறாள் பாடல்-3

முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர்! ஈசன் பழஅடியீர்! பாங்குடையீர்!
பத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை?
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்!

உ ஓம் திருவாசகம்-திருவெம்பாவை பெலவிகரணி காளியை எழுப்புகிறாள் பாடல்-4

ஒள்நித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்!

ஓம் திருவாசகம்திருவெம்பாவை காளி இரவுத்திரியை எழுப்புகிறாள் பாடல்-5

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்தமையாட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்!

உ ஓம் திருவாசகம்-திருவெம்பாவை இரவுத்திரி சேட்டையை எழுப்புகிறாள் பாடல்-6

மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ?
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலை அளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்கும் தம்கோனைப் பாடேலோர் எம்பாவாய்!

உ ஓம் திருவாசகம்-திருவெம்பாவை சேட்டை வாமையை எழுப்புகிறாள் பாடல்-7

அன்னே இவையும் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன்என்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என் அரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ?
வன்னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்!

உ ஓம் திருவாசகம் - திருவெம்பாவை வாமை சிவசக்தியை எழுப்புகிறாள் பாடல்-8

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்!

உ ஓம் திருவாசகம் - திருவெம்பாவை பாடல்-9

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சிரடியோம்
உன்அடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய்!

IN13175-036 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர்? ஏதவன்பேர்? ஆருற்றார்? ஆரயலார்?
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்!



மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையால் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யாவெண் நீருடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்!



ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்!



பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினல்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்!

IN13175-037 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

உ ஓம் திருவாசகம்-திருவெம்பாவை பாடல் 14

காதார் குழை ஆடப் பைம்பூண் கலன் ஆடக்
கோதை குழல் ஆட வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனல் ஆடச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்!

உ ஓம் திருவாசகம் திருவெம்பாவை பாடல்-15

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றேநம் பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான் பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆம்ஆறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்!

உ ஓம் திருவாசகம் - திருவெம்பாவை பாடல்-16

முன்னைக் கடலைச் சுருக்கி எழுந்துடையான்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பின் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நம்தம்மை ஆளுடையான்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கும் முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்!

உ ஓம் திருவாசகம் - திருவெம்பாவை பாடல் 17

செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்!

IN13175-038 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்பரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்!



உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எம்கொங்கை நின் அன்பர் அல்லாதோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எம் கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்!



போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாயிர்க்கும் ஈறும் இணையடிகள்
போற்றி மால்நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்!

---

## சரஸ்வதி சிந்தனை

ஓம் புத்தகத் துள்ளுறை மாதே பூவில் அமர்ந்துறை வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய் வேதப் பொருளுக் கிறைவி
முத்தின் குடையுடையாளே மூவுலகும் தொழுதேவி
செப்புகவித்தன முலையாய் செவ்வரிஓடிய கண்ணாய்
முத்துநிறைந்த வெண்பல்லாய் முருக்கம்பூமேனி நிறத்தாளே
தக்கோலந்தின்ற துவர் வாயாய் சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலும் உன்னை தொழுவோம் எழுத்தறிபுத்தி பண்ணிவைப்பாய்.

உ ஓம் சக்தி



வேதப் பொருளுக் கிறைவி சரஸ்வதி

IN13175-040 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

உ ஓம் சக்தி



உ ஓம் நம சிவாய

# ஆலயங்களில் செய்ய வேண்டிய அபிஷேகங்களும் அதன் பலனும்

1. பால் அபிஷேகம் — நீண்ட நாள் வாழ்வு தரும்.
2. தயிர் அபிஷேகம் — நன்மக்கட்பேறுண்டாகும்.
3. நெய் அபிஷேகம் — பிறவிப்பிணி நீங்கி பேறுண்டாகும்.
4. தேன் அபிஷேகம் — சத்திய வாசகம் வரும்.
5. பஞ்சாமிர்த அபிஷேகம் — உறுதியான உடல் வலிமை தரும்.
6. இளநீர் அபிஷேகம் — சௌபாக்கிய சுகபோகம் நல்கும்.
7. எழுமிச்சம் பழரசசாறு அபிஷேகம் — பகையை அடியோடழிக்கும்.
8. கரும்பின்சாறு அபிஷேகம் — நோய் நொடி தீரும்.
9. திருமஞ்சனப்பொடி அபிஷேகம் — கடன் தீரும் நோய் தீரும் துன்பம் தீரும்.
10. சந்தனத் தைலம் அபிஷேகம் — சுகானந்தம் தரும்
11. விபூதி அபிஷேகம் — தெய்வ சான்னித்யம் உண்டாகும்.
12. பன்னீர்சந்தனக் குழம்பு அபிஷேகம் — லெக்ஷ்மி கடாட்சம் உண்டாகும்.
13. சொர்ணபிஷேகம் — வியாபார விருத்தி லாபமும் தரும்.
14. வலம்புரி சங்கலாபிஷேகம் — தீவினைகளை நீக்கி நல்லருள் பாலிக்கும் அன்புடன் நினைத்த காரியம் முடியும்

த்ரிமது நிவேதனம் மிக விசேஷம்

த்ரிமது என்பது (பசுவின்) பால், நெய், தேன் 3ம் கலந்தது.

IN13175-041 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

உ ஓம் ஸ்ரீ கணேசாய நம

சிந்திப்பவர்க்கருள் கணபதி ஜெய ஜெய
நம்பிக்கையுண்டு நமக்கு விநாயகனின்
தும்பிக்கையுண்டு துணை.

நாளென்செயும் வினைதானென்செயும் எனைநாடிவந்த கோளென் செயும்
கொடுங் கூற்றென் செயும் குமரேசரிருதாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும்
ஷண்முகமும் தோளும் கடம்பும் எனக்கு முன்னேவந்து தோன்றிடினே.


ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகன் வாழ்க வெற்பைக் கூறு
செய்தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்கச் செவ்வேல் ஏறியமஞ்ஞை
வாழ்க யானைதன் அணங்கு வாழ்க மாரிலா வள்ளி வாழ்க
வாழ்கச் சீரடியா லெல்லாம்.

ஆனைமுகன் ஆறுமுக அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு.

அச்சிட்டோர்: சண்முகா அச்சகம், 64-A, சிம்பாங் கார்டன், சிம்பாங் தைப்பிங்.

IN13175-042 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org

IN13175-043 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org



IN13175-044 02/02/2010 © Institut Français de Pondichéry ifpindia.org